எனது இல: ஈடி 01∴05∴03∴05
தமிழ் மொழிப் பிரிவு
கல்வி அமைச்சு.
இசுறுபாய.
பத்தரமுல்ல.
2016.11.19

அ. மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர்களுக்கு,
ஆ. மாகாணக்கல்விப் பணிப்பாளர்களுக்கு,
இ. வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு,
ஈ. பாடசாலை அதிபர்களுக்கு,

## அகில இலங்கைத் தமிழ் மொழித்தினம்-2017

01. 2017 ஆம் ஆண்டிற்குரிய அகில இலங்கைத் தமிழ் மொழித்தின போட்டிகள் யாவும் இவ்விணைப்பில் குறிப்பிடப்படும் விடயங்களுடன் சுற்று நிருப இலக்கம் (2013∴33) குறிப்பிட்டவாறே நடைபெறல் வேண்டும்

02. 2017 ஆம் ஆண்டிற்குரிய போட்டிகள் நடாத்தப்படவேண்டிய திகதிகள் பின்வருமாறு.

அ. பாடசாலை மட்டப் போட்டிகள் 2017 02.28 ஆம் திகதிக்கு முன்பு

ஆ. வலய மட்டப் போட்டிகள் 2017.04.30 ஆம் திகதிக்கு முன்பு

இ. மாகாண மட்டப் போட்டிகள் 2017.05.30 ஆம் திகதிக்கு முன்பு

03. தேசிய மட்டப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் 2017.05.31 ஆம் திகதிக்கு முன்பு அனுப்பப்படல் வேண்டும் யூலை மாதம் 8,9 மற்றும் 15.16 அகில இலங்கைத் தமிழ் மொழித்தினப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

**04. 4.0 போட்டி இல. 18 - பேச்சு முதலாம் பிரிவு தரங்கள் 04,05**

4.1 **விடயத்தலைப்பு :**
அ. நாலடியார்
ஆ. ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்
இ. திருக்குறளின் மகிமை
உ.விளையாட்டுக்களின் மகிமை

**05. 5.0 போட்டி இல. 19 - பேச்சு இரண்டாம் பிரிவு தரங்கள் 06,07**

**5.1 விடயத் தலைப்பு**
அ. கிராமிய இலக்கியம் ( பாடல்கள் )
ஆ .பாட்டுக்கொரு புலவன் பாரதி
இ. இயற்கையும் நாமும்
ஈ. உள்ளத்தனையது உயர்வு

**06. 6.0 போட்டி இல. 20 பேச்சு மூன்றாம் பிரிவு தரங்கள்- 08,09**

**6.1 விடயப்பரப்பு**
அ. சிலப்பதிகாரத்தின் பாத்திர வார்ப்புகள்
ஆ இலத்திரனியல் ஊடகங்களும் மாணவர்களும்
இ. தமிழ்மொழித்திறன்கள்
ஈ. சுற்றாடல் பாதிப்புகளும் அதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளும்

## இசையும் அசைவும்

**போட்டி இல: 28**

**முதலாம் பிரிவு தரங்கள் 04,05**

**7.0 விடயம்:**

“**இயற்கை**” எனும் தலைப்பில் புதிய ஆக்கப்பாடல் ஒன்றினை ஆக்கம் செய்து அபிநயத்தல். சுருதி வாத்தியம் மட்டும் உபயோகிக்கலாம்.

**7.1 நேரம் 4-5 நிமிடங்கள்**
**7.2 புள்ளித்திட்டம் சுற்று நிருபம் பார்க்க:**
**சுருதி வாத்தியம் மாணவர் அல்லது ஆசிரியர் ஒருவர் இசைக்கலாம்.**

# பாவோதல்

**8. பிரிவு :1போட்டி .இல:23** **தரங்கள் 4,5**

**8.1 விடயம்**

1. **திருக்குறள்:** அதிகாரம் 8 **அன்புடைமை**
2. **பாரதியார்** கவிதைகள் - தேசிய கீதங்கள்( தேசபக்திப்பாடல்கள்)
   எங்கள் தாய் பாடல்-9
   "தொன்று நிகழ்ந்த தனைத்து முணர்ந்திரு…….(தொடங்கி)
   செறுவது நாடி வருபவரைத்துகள் செய்து கிடத்துவள் தாய்
   (வரை 5 பாடல்கள்)

3.நாலடியார். 12 மெய்மை " தம்மை இகழ்வாரைத் தாமவரின்"

**8.2 போட்டி இல:24** **பிரிவு :2** **தரங்கள் 6,7**

**8.2 விடயம** 8.2.1

1. **திருக்குறள்:** அதிகாரம் 16- பொறையுடைமை
   **31- வெகுளாமை**
2. பாரதியார் **கவிதைகள்-** **பல்வகைப்பாடல்கள் பாடல் :-15**
   **"விந்தை விந்தையாகஎனக்கே -பல**
   **நிலாவையும் வானத்து மீனையுங் காற்றையும் …எனத்தொடங்கி**
   **நல்ல மனம் படைத்தோம் என்பது வரை ( 3பாடல்கள்)**

3.ஏலாதி பாடல் :-03 **இடர்தீர்த்த வெள்ளாமை…….**

**8.2 போட்டி இல:25** **பிரிவு :3** **தரங்கள் 8,9**

**8.3 விடயம்** 8.3.1

1. **திருக்குறள்:** **அதிகாரம்** **12- நடுவு நிலைமை**
   **65 சொல்வன்மை**
2. **பாரதிதாசன் கவிதைகள்-** **பாடல் 25 தமிழ்க்காதல்**
   **"காலம் அடுக்கிய செவ்விதழால்…எனத்தொடங்கி**
   **கொட்டி விட்டாள் எனைத் தொட்டிழுத்தாள் … வரை"**
3. **பழமொழி நானூறு** **பாடல் 34 அறிவொன்றே செல்வம்**
   **அருவிலை மாண் கலனும் ஆன்ற பொருளும்…..**
4. **நளவெண்பா** **பாடல் 265** **-தெய்வம் தவறு செய்யத் தீவினையோ துணை செய்யும்**
   **அறம் பிழைத்தார் பொய்த்தார் அருள்சிதைத்தார்**

**8.3 போட்டி இல:26** **பிரிவு :4** **தரங்கள் 10,11,**

**8.3 விடயம்** 8.3.1

1. **திருக்குறள்** **74- நாடு**
   **83- கூடா நட்பு**
2. **பாரதிதாசன் கவிதைகள் -** **பாடல் -41 திராவிடநாட்டுப்பண்**
   **தமிழர்களின் எழுதுகோல்**
   **கருத்தூற்று மலையூற்றாய்ப் பெருக்கெடுக்க வேண்டும்….. ( எனத்தொடங்கி)**
   **பிறர் தமர் என்றெண்ணுவது பேதையே அன்றோ … வரை ( 2 பாடல்கள்)**
3. **நளவெண்பா :** **முகத்தாமரையை மொய்க்கவரும் வண்டினங்கள் பாடல் 184 ,185**
   பாடல் 184 **மங்கையொருத்தி மலர் கொய்வாள்….**
   பாடல் 185 **" புல்லும் வரி வண்டைக் கண்டு"…….**
4. **கம்பராமாயாணம் -** **கிட்கிந்தா காண்டம்**
   - பாடல் 525- **தூநிறச் சுடுசரம் தூணி தூங்கிட…….**
   - பாடல்526 – **தெரிகணை மலரொடும் திறந்த நெஞ்சொடும்……**

**புறநானூறு** **உடையேம் இலமே பாடல் :- 112**

- **அற்றைத் திங்கள் அவ்வெண்நிலவில்……**
  **குன்றும் கொண்டார் யாம் எந்தையும் இலமே (வரை 5 வரிகள்)**

8.4.1 விடயம்: போட் இல:27 இலக்கிய விமர்சனம் பிரிவு-5 தரங்கள் 12,13

.

- கலித்தொகை 9 ஆம் பாடல் ..” பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்கு அல்லவை…..
  சூழுங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளோ…. (9 வரிகள்)
- சில்லையூர் செல்வராஜனின் “ சங்கெடுத்து ஊது தமிழ்ச்சாதி பெரும் சாதி

இதனைத் தொலைக்காட்கி ஊடாக விமர்சனம் செய்வதாகக் கற்பனை பண்ணிச் செய்தல் வேண்டும்.
பாடசாலைச் சீருடையில் சமுகமளித்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| புள்ளித்திட்டம் | பொருளமைவு | -10 |
| | விமர்சிக்கும் திறன் | -30 |
| | மொழியாளுமை | -30 |
| | உச்சரிப்பு | -20 |
| | நிலை | -10 |
| | மொத்தம் | 100 |

➢ 20 நிமிடங்களுக்குள் இரு தலைப்புகளுக்கும் விமர்சனம் செய்தல் வேண்டும்.

**போட்டி இல: 23 முதலாம் பிரிவு :1 தரங்கள் 4,5**

**1.திருக்குறள்: அன்புடைமை அதிகாரம்:8**

**2. பாரதியார் கவிதைகள்: தேசிய கீதங்கள் ( தேசபக்திப் பாடல்கள்)**

**எங்கள் தாய்- பாடல்-9**

தொன்று நிகழ்ந்த தனைத்து முணர்ந்திடு
சூழ்கலை வாணர்களும் - இவள்
என்று பிறந்தவ ளென்றுணராத
இயல்பின ளாமெங்கள் தாய்

யாரும் வகுத்தற்கரிய பிராயத்த
ளாயினு மேயெங்கள் தாய்- இந்தப்
பாருளெந் நாளுமோர் கன்னிகையென்னப்
பயின்றிடு வாளெங்கள் தாய்

முப்பது கோடி முகமுடையாளுயிர்
மெய்ம் புற வொன்றுடையாள் - இவள்
செப்பு மொழிபதி னெட்டுடையாள் , எனிற்
சிந்தனை யொன்றுடை யாள்

நாவினில் வேதமுடையவள் கையில்
நலந் திகழ் வாளுடை யாள்- தனை
மேவினர்க் கின்னருள் செய்பவள் தீயரை
வீட்டிடு தோளுடை யாள்

அறுபது கோடி தடக்கைகளாலும்
அறங்கள் நடத்துவள் தாய்- தனைச்
செறுவது நாடி வருபவரைத்துகள்

செய்து கிடத்துவள் தாய்

**நாலடியார் பாடல் 12 மெய்மை பாடல் :117**

தம்மை இகழ்வாரைத் தாமவரின் முன்னிகழ்க
என்னை அவரொடு பட்டது – புன்னை
விறற் பூங்கமழ்கானல் வீங்கு நீர்ச் சேர்ப்ப
உறற்பால யார்க்குமுறும்.

**போட்டி இல:24 பாவோதல் பிரிவு:02 தரங்கள்: 6,7**

**1. திருக்குறள்: அதிகாரம்: 16 பொறையுடைமை**
**31 வெகுளாமை**

**2. பாரதியார் பாடல்கள் பல்வகைப்பாடல்கள் - பாடல் : 15**

- **நிலாவும் வான்மீனும் காற்றும் மனத்தை வாழ்த்துதல்**

நிலாவையும் வானத்து மீனையுங் காற்றையும்
நேர்ப்பட வைத்தாங்கே
குலாவு மமுதக் குழம்பைக் குடித்தொரு
கோலவெறி படைத்தோம்
உலாவு மனச்சிறு புள்ளிகளை யெங்கணும்
ஓட்டி மகிழ்ந்திடுவோம்
பலாவின் கனிச் சுளை வண்டியிலோர் வண்டு
பாடுவதும் வியப்போ?

தாரகையென்ற மணித்திரள் யாவையும்
சார்ந்திடப் போ மனமே
ஈரச் சுவையதி லூறி வருமதில்
இன்புறுவாய் மனமே
சீர விருஞ்சுடர் மீனொடு வானத்துத்
திங்களையுஞ் சமைத்தே
ஓரழ காக விழுங்கிடு முள்ளத்தை
யொப்ப தொர் செல்வமுண்டோ?

பன்றியைப் போலிங்கு மண்ணிடைச் சேற்றிற்
படுத்துப் புரளாதே
வென்றியை நாடி யில் வானத்திலோட
விரும்பி விரைந்திடுமே
மூன்றி லோடு மொர் வண்டியைப் போலன்று
மூன்றுலகுஞ் சூழ்ந்தே
நன்று திரியும் வி மானத்தைப் போலொரு
நல்ல மனம் படைத்தோம்

**03. ஏலாதி பாடல் :36**

இடர் தீர்ந்த வெள்ளாமை கீழினஞ்சே ராமை
படர் தீர்த்தல் யார்க்கும் பழிப்பின் - நடைதீர்த்தல்
கண்டவர் காமுறுஞ் சொற் காணிற் கலவியின் கண்
விண்டவர் நூல் வேண்டா விடும்.

**போட்டி இல:25 பாவோதல் பிரிவு:03 தரங்கள்: 8,9**

**1. திருக்குறள்: அதிகாரம்: 12 நடுவுநிலைமை**
**65 சொல்வன்மை**

**2. பாரதியார் கவிதைகள் - பாடல் : 25**

**தமிழ்க்காதல்**

கமல மடுக்கிய செவ்விதழால்- மலர்க்
காட்டினில் வண்டின் இசை வளத்தால்
கமழ்தரு தென்றல் சிலிர் சிலிர்ப்பால்- கருங்
கண்மலரால் முல்லை வெண்ணகைப்பால்
அமையு மன்னங்களின் மென்னடையால் -மயில்
ஆட்டத்தினால் தளிரூட்டத்தினால்
சமையு மொருத்தி அப்பூஞ்சோலை- எனைத்
தன் வசமாக்கி விட்டாளொருநாள்

சோலை அணங்கொடு திண்ணையிலே –நான்
தோளினை யூன்றி இருக்கையிலே
சேலை நிகர்த்த விழியுடையாள்- என்றன்
செந்தமிழ்ப் பத்தினி வந்து விட்டாள்!
சோலையெலாமொளி வானமெலாம்- நல்ல
தோகையர் கூட்டமளிக்கும்
கோல இன்பத்தை யென்னுள்ளத்திலே – வந்து
கொட்டி விட்டாள் எனைத் தொட்டிழுத்தாள்

**03.அறிவொன்றே செல்வம் பழமொழி நாநூறு பாடல்: 34**

அருவிலை மாண்கலனும் ஆன்றபொருளும்
திருவுடையாராயின் திரிந்தும் - வருமால்
பெருவரை நாட ! பிரிவின்றியதனால்
திருவினும் திட்பம் பெறும்

**04.தெய்வம் தவறு செய்யத் தீவினையோ துணைசெய்யும் நளவெண்பா -265**

அறம் பிழைத்தார் பொய்த்தார் அருள் சிதைத்தார்- மானத்
திறம் பிழைத்தார் தெய்வமிகழ்ந்தார்- புறங்கடையில்
சென்றார் புகும் நரகம் சேர்வாய்கொல்- என்றழியா
நின்றாள் விதியை நினைந்து

போட்டி இல:26 பாவோதல் பிரிவு:04 தரங்கள்: 10,11

1. திருக்குறள்: அதிகாரம்: 74- நாடு
83- கூடாநட்பு

**2. பாரதிதாசன் கவிதைகள்** **பாடல் : 41**

## தமிழர்களின் எழுதுகோல்

கருத்தூற்று மலையூன்றாய்ப் பெருக்கெடுக்க வேண்டும்
கண்டதை மேற்கொண்டெழுதிக் கட்டுரையாக்குங்கால்
தெருத்தூற்றும் ஊர் தூற்றம் தம்முளமே தம்மேற்
சிரிப்பள்ளித் தூற்றும் ! நலம் செந் தமிழ்க்கும் என்னாம்
தரத் தம்மால் முடிந்த மட்டும் தரவேண்டும் பின்னால்
சர சரெனக் கருத்தூறும் மனப் பழக்கத்தாலே!
இருக்கும்நிலை மாற்றவொரு புரட்சி மனப்பான்மை
எற்படுத்தல் பிறர்க்குழைக்கும் எழுத்தாளர் கடனாம்

விருப்பத்தை நிறைவேற்ற முயலுங்கால் வையம்
வெறுந்தோற்ற மென்னும் ஒரு வேதாந்தப் பேச்சேன்?
மரத்தடியில் மறைந்திருந்து வாலியினைக் கொன்ற
மட்டமுறு கருத்துக்கள் இப்போது வேண்டாம்
உரத்தினிலே குண்டு புகும் வேளையிலும் மக்கள்
உயிர்காக்கும் மனப்பான்மை உண்டாக்க வேண்டும்!
பெருநிலத்தார் எல்லோரும் ஒரு தாயின் மக்கள்
பிறர் தமர் என்றெண்ணுவது பேதமையே அன்றோ!

**3. நளவெண்பா** **பாடல்கள் 184,185**

### முகத்தாமரை மொய்க்க வரும் வண்டினங்கள்

(184) மங்கையொருத்தி மலர் கொய்வாள் வாள் முகத்தைப்
பங்கயமென் றெண்ணிப் படி வண்டைச் - செங்கையால்
காத்தாளக் கைமலரைக் காந்தளெனப் பாய்தலுமே
வேர்த்தானைக் காணென்றான் வேந்து

(185) புல்லும் வரிவண்டைக் கண்டு புனமயில் போல்
செல்லுமடந்தை சிலம்பவித்து – மெல்லப்போய்
அம்மலரைக் கொய்யாதருந்தளிரைக் கொய்வானைச்
செம்மலரின் தேனே தெளி

04. **கம்பராமாயாணம்** **பாடல்கள் :- 525,526**

(525) தூநிறச் சுடுசரம் தூணி தூங்கிட
வானுறப் பிறங்கிய வைரத்தோளொடும்
யானுறக் கடவதே இதுவு மிந்நிலை
வேனிறத் துற்ற தொத்துழியும் வீகிலேன்

(526) தெரிகணை மலரொடும் திறந்த நெஞ்சொடும்
அரிய வன்துயரொடும் யானும் வைகுவேன்
எரியும் மின்மினி மணிவிளக்கினின் துணைக்
குரியினம் பெடையொடும் துயில்வ கூட்டினுள்

**05.புறநானூறு** **உடையேம் இலமே** **பாடல்: 112**

அற்றைத் திங்க ளவ் வெண்ணிலவில்
எந்தையு முடையேம் ! எம் குன்றும் பிறர் கொளார்
இற்றைத் திங்களிவ் வெண்ணிலவில்,
வென்றெறி முரசின் வேந்த ரெம்
குன்றுங் கொண்டார் யாமெந்தையுமிலமே.

# இசை

**9.0 போட்டி இல: 29 இசை – தனி இரண்டாம் பிரிவு: தரங்கள் 06,07**
**9.1 நேரம் : 4-5 நிமிடம்**

**9.2 விடயம் :** “பாயும் மொழி நீ எனக்கு” எனத் தொடங்கும் பாரதியார் பாடலை தரப்பட்ட தரப்பட்ட 4 இராகங்களில் விரும்பிய ஒரு இராகத்தில் பாடுதல். (ஸ்வரக்கோர்வைகள், தாள, நடைமாற்றங்கள், தவிர்க்கவும். நேரத்துக்கேற்ப பாடல் வரிகளைத் தெரிவு செய்யவும்)
**1.கானடா 2.மதுவந்தி 3. தேஷ் 4. காபி**

**9.3 : புள்ளித்திட்டம் :** சுற்றுநிருபத்தைப் பார்க்கவும்

**10.0 போட்டி இல: 30 இசை – தனி மூன்றாம் பிரிவு: தரங்கள் 08,09**
**10.1 நேரம் : 5-6 நிமிடங்கள்**

**10.2 விடயம்:** பின்வரும் இராகங்களில் விரும்பிய ஏதாவது ஒரு தமிழ்க் கீர்த்தனை ஒன்றைப் பாடுதல்:
(சிட்டைஸ்வரம் தவிர்க்கவும் )

i. சண்முகப்பிரியா
ii. பந்துவராளி
iii. கல்யாணி

**10.3 புள்ளித்திட்டம்** : சுற்றுநிருபத்தைப் பார்க்கவும்

**11.0 போட்டி இல: 31 இசை – தனி நான்காம் பிரிவு: தரங்கள் 10,11**
**11.1 நேரம்: 6-8 நிமிடங்கள்**

**11.2 விடயம்:** விரும்பிய ஒரு மத்திம காலத்தமிழ்க் கீர்த்தனையை சிட்டைஸ்வரத்துடன் பாடுதல்:
(சிட்டைஸ்வரம் ஆக்கம் செய்து பாடலாம்)
**11.3 புள்ளித்திட்டம்** : சுற்றுநிருபத்தைப் பார்க்கவும்

**12.0 போட்டி இல: 32 இசை – தனி ஐந்தாம் பிரிவு: தரங்கள் 12,13**
**12.1 நேரம்: 12-15 நிமிடம்**
**12.2 விடயம்:**

i. இராக ஆலாபனை செய்து அவ்விராகத்தில் விரும்பிய தமிழ்க் கீர்த்தனை ஒன்றைப்பாடி நிரவல் செய்து கற்பனா ஸ்வரம் முதலாம் இரண்டாம் காலங்களில் பாடுதல்
ii. விரும்பிய ஒரு காவடிச்சிந்து

**12.3 புள்ளித்திட்டம் :** சுற்றுநிருபத்தைப் பார்க்கவும்

**இசை – குழு -1**

**13.0 போட்டி இல: 33 தரங்கள் 6,7,8,9**
**13.1 நேரம்: 6-8 நிமிடங்கள்**
**13.2 விடயம்:** “திக்குத்தெரியாத காட்டில்” என்ற பாரதியார் பாடலை இராக மாலிகையாக தரப்பட்ட இராகங்களில் குறைந்தது மூன்று இராகங்களில் பாடுதல்

**I. ஹம்சத்வனி ஐ. சிம்ஹேந்திரமத்திமம் ஐஐ. பெஹாக் ஐஏ. பிருந்தாவன சாரங்கா எ. சிவரஞ்சனி**

நேரத்திற்கேற்ப பாடல் வரிகளைத் தெரிவு செய்யலாம். தாள, நடைமாற்றங்கள், ஸ்வரக்கோர்வைகள் செய்யலாம்.

**13.3 புள்ளித்திட்டம் :** சுற்றுநிருபத்தைப் பார்க்கவும்

**14.0 போட்டி இல: 34** **தரங்கள் 10,11,12,13**

14.1 **நேரம் : 12-15 நிமிடங்கள்**
**14.2 விடயம்:** 1. விரும்பிய ஒரு தமிழ்ப் பதவர்ணத்தை முதலாம், இரண்டாம் காலங்களில் பாடுதல் (பூர்வாங்கம் , உத்தராங்கம் இரண்டும் 2 காலங்களிலும் பாடப்படவேண்டும்.)

2. விரும்பிய ஒரு தமிழ்த் தில்லானா

**13.3 புள்ளித்திட்டம் :** சுற்றுநிருபத்தைப் பார்க்கவும்

# நடனம்

**14.0 போட்டி இல:35 நடனம் தனி-பிரிவு-11 தரங்கள்: 06,07**

**14.1: விடயம்:** விபுலானந்தர் பாடல் - வெள்ளை நிற மல்லிகையோ''………..

14.2: நேரம்: 5-6 நிமிடங்கள்

14.2: குறிப்பு: அபிநயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படல் வேண்டும்.வகுப்பின் தரத்திற்கேற்ப பரத நடன அடவுகள் பிரயோகிக்கலாம். ஜதிகள், ஸ்வரக்கோவைகள் தவிர்க்கப்படல் வேண்டும். நட்டுவாங்கத்தாளமும் பின்னணி இசையும் போதுமானவை. அணிசேர் இசைக்கருவிகள் தவிர்க்கப்படல் வேண்டும்.

14.3 புள்ளித்திட்டம் : சுற்று நிருபத்தைப் பார்க்கவும்.

**15.0: போட்டிஇல: 36 நடனம் தனி- பிரிவு -3 தரங்கள்: 08,09**

**15.1 விடயம்: யோகர் சுவாமி பாடல்- “ நல்லூரான் திருவடியை நானினைத்த மாத்திரத்தில் எல்லாம் மறப்பேனடி..**

15.2 நேரம்: 06-08 நிமிடங்கள்

15.3 குறிப்பு: இந்த நடனத்தில் அடவுகள் ,ஜதிகள், ஸ்வரக்கோவைகள், இடம்பெறலாம். நட்டுவாங்கத்தாளமும் ,பின்னணி இசையும் போதமானவை. அணிசேர் இசைக்கருவிகள் தவிர்க்கப்படல் வேண்டும்.

15.4: புள்ளித்திட்டம் : சுற்று நிருபத்தைப் பார்க்கவும்

**16.0 போட்டி இல:37 நடனம் தனி- பிரிவு -4 தரங்கள்:10.11**

**16.1 விடயம்: வீரமணிஐயர் பாடல் “கற்பகவல்லின் பொற்பதங்கள் பிடித்தேன்**

**16.2 நேரம்: 06-08 நிமிடங்கள் ( ஆயத்தம் மற்றும் அபிநயித்தல் அடங்கலாக)**

**16.3 குறிப்பு: நட்டுவாங்கத்தாளமும், பின்னணி இசையும் போதுமானவை. அணிசேர் இசைக்கருவிகள் தவிர்க்கப்படல் வேண்டும்..**

**16.4 புள்ளித்திட்டம்: சுற்று நிருபத்தைப் பார்க்கவும்**

**17.0 போட்டி இல:38 நடனம் தனி- பிரிவு -5 தரங்கள்:12.13**

**17.1 விடயம்: நடுவர்கள் வழங்கும் தலைப்பை மையமாக வைத்து 10 நிமிடங்கள் வரை தயார் செய்து அத்தலைப்பின் பொருள் விளங்க 05-07 அபிநயித்தல்**

**17.2 நேரம்: 15-20 நிமிடங்கள்**

**17.3 குறிப்பு: நட்டுவாங்கத்தாளம், பின்னணி இசையும் மிருதங்கமும் கட்டாயம் இடம்பெறல் வேண்டும்.**

**17.4 புள்ளித்திட்டம்: சுற்று நிருபத்தைப் பார்க்கவும்**

## நடனம் குழு-1

18.0 போட்டி இல:39
18.1 விடயம்: கரகாட்டம்
18.2 நேரம்: 6-7 நிமிடங்கள்
18.3 புள்ளித்திட்டம்: சுற்று நிருபத்தைப் பார்க்கவும்

19.0 போட்டி இல: 40 **நாட்டிய நாடகம் (ஆடற்கதை) திறந்தபோட்டி**

19.1 நேரம்: 15-20 நிமிடங்கள்
19.2 விடயம்: " சீதா சுயம்வரம்"

**குறிப்பு: (கௌசிய முனிவரின் யாகம் காத்து தாடகை சுபாகு அசுரர்களை வதம் செய்து தபசிகள் யாகம் காத்தபின் அகலிகைக்கு சாப விமோசனம் தருகின்றார். ஸ்ரீராமன். அதன் பின் மிதிலை மாநகருக்கு ராம லக்ஷ்மணர் வருகின்றார். வீதியில் ஸ்ரீ ராமனை கன்னிமாடத்திலிருநது காண்கிறாள் சீதை. அண்ணலும் நோக்க அவளும் நோக்கினாள். சீதா சுயம்வரத்தில் இராமன் வில்லொடித்து சீதைக்கு மாலையிடுகிறான்.**

**19.3 புள்ளித்திட்டம்** : சுற்று நிருபத்தைப் பார்க்கவும்

**20.0 போட்டி இலக்கம்: 42 மேடை நாடகம் திறந்த போட்டி.**

**20.1 விடயப் பொருள்:-** சமகால உலகமயமாதல் மற்றும் அறிவுமையப் பொருளாதாரச் சூழலில், இளைய சமுதாயத்தினர் எதிர்நோக்கும் உள, சமூக நெருக்கடிகளையும் அவை ஒட்டுமொத்த சமூகத்தையும், நாட்டையும் பாதிப்பிற்குள் தள்ளிவிடுவதையும் மையப்படுத்தியதாக நாடகங்கள் தயாரிக்கப் பெறுதல் வேண்டும்.

**20.2 விடயப் பொருள் தொடர்பான விளக்கம்:-**

கிராமமாகச் சுருங்கியுள்ள உலகத்தின் ஒழுங்கானது, அறிவை மூலதனமாகப் பயன்படுத்தி உலகளாவிய வணிக வலையமைப்பை விருத்தி செய்து வருகிறது. அது சமூகத்திற்கு அவசியமான சில அம்சங்களுடன் பாதிப்பான விளைவுகளையும் தோற்றுவிப்பதாக உள்ளது. அதன் முதன்மை இலக்கு இளையோரே. அது இளையோரிடத்தில் வண்ணக்கனவுகளை விதைத்து வருகிறது. வணிக நோக்குக் கருதிப் பல்வேறு சமூகப் பொருத்தப்பாடற்ற விடயங்களின் மீது இளையோரின் விருப்பார்வங்களைக் குவித்து வருகிறது. இது அவர்களின் சிந்தனையிலும் நடத்தையிலும் ஆரோக்கியமற்ற தன்மையைத் தோற்றுவிக்கிறது சமூகத்தின் கலாசார வாழ்வை ஒட்டுமொத்தமாகச் சிதைத்துவிடுகின்றது. சுய சிந்தனையுள்ள சமூகத்திற்குப் பதிலாக, முடமான சமூகத்தை உருவாக்குவது, அறிவுமையப் பொருளாதாரத்தின் விரிவாக்கத்திற்கு இன்றியமையாதது ஆகும். அவ்வாறானதொரு விடயப் பரப்பின் பின்புலத்தில் பொருத்தமான கருப்பொருளொன்றைத் தெரிந்தெடுத்து 30 நிமிடத்தில் ஆற்றுகை செய்யத்தக்க நாடகத்தைத் தயாரிக்க வேண்டும்.

**20.3 போட்டி விதிகள்:-**

1. நாடகங்கள் சர்வதேச நிலைப்பட்ட பார்வையைக் கொண்டிருக்க வேண்டும்.
2. இளைய சமுதாயத்தினருக்கு உரியதான பிரச்சினையைப் பேச வேண்டும்.
3. படைப்பாளிகள், மேற்கண்ட விடயப் பொருளை மையப்படுத்தி நாடகக் கருவைத் தாம் விரும்பியவாறு தெரிவுசெய்து கொள்ளலாம்.
4. இது பாடசாலை நாடகம் என்பதால், காட்சி விதானிப்பு எளிமையானதாக இருக்க வேண்டும். எளிதாகவும் விரைவாகவும் கையாளத்தக்கதாய் அமைய வேண்டும்.
5. நாடகங்கள் சமகாலத் தன்மையுடையனவாய் இருத்தல் வேண்டும் (கடந்த 10 ஆண்டுகளுக்கு உட்பட்ட).
6. மேடையில் உள்ள ஒளிவிதானிப்புக் கருவிகளையே பயன்படுத்த வேண்டும். பிரத்தியேக ஒளிவிதானிப்புக் கருவிகளைப் பயன்படுத்த முடியாது.
7. அணிசேர் கலைஞர்களாக, 06 பேரை வாத்தியங்களை இசைப்போராகவும் பாடகராகவும் பயன்படுத்தலாம். பாடகர் குழுவில் அதே பாடசாலையைச் சேர்ந்த மாணவர்களே செயற்பட முடியும்.
8. வாத்தியங்களை இசைப்பதற்கு அதே பாடசாலையைச் சேர்ந்த அன்றேல் அயற் பாடசாலையொன்றைச் சேர்ந்த நிரந்தர ஆசிரியர்களைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். அவர்கள் நிரந்த ஆசிரியர்கள் என்பது, கோட்ட, வலயமட்டப் போட்டிகளின் போது அதிபராலும் மாகாணமட்டப்

போட்டி போட்டியின் போது வலயக் கல்விப் பணிப்பாளராலும் தேசியமட்டப் போட்டியின் போது மாகாணக் கல்விப் பணிப்பாளராலும் உறுதிப்படுத்தப்பெற வேண்டும்.

9. மாணவர்கள் வாத்தியம் இசைப்பவர்களாயின், அவர்கள் அதே பாடசாலையைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும்.
10. நடிகர் எண்ணிக்கை 8-12 பேர் ஆகும். அவர்கள் மாத்திரமே சான்றிதழ் பெறும் உரித்துடையவராவர். நடிகர் பாடகர் குழுவிலும் நின்று தொழிற்பட முடியும்.
11. போட்டிக்கான நேரத்தில் இருந்து ஒரு நிமிட விலகல் அனுமதிக்கப் பெறும்.
12. ஏனைய போட்டிவிதிகள் ஐந்து வருடச் சுற்றறிக்கைக்கு அமைவானவை ஆகும்

**புள்ளித் திட்டம்**

- கருவும் கதைப்பின்னலும் (சமகாலத் தன்மையுடன்) - 10 புள்ளிகள்.
- கற்பனை, புதுமை, படைப்பாக்கம் - 10 புள்ளிகள்.
- ஆற்றுகையின் தாக்கவன்மை - 15 புள்ளிகள்.
- பாத்திரச் சித்திரிப்பு ( நடிப்பு வன்மை) - 20 புள்ளிகள்
- நெறியாள்கை - 15 புள்ளிகள்
- அரங்கத் துணைக் கலைகளின் தாக்கவன்மை - 15 புள்ளிகள்.
- மேடை முகாமைத்துவம் - 10 புள்ளிகள்.
- நேர முகாமைத்துவம் - 05 புள்ளிகள்

**மொத்தம் 100 புள்ளிகள்**

**21.0 போட்டி இல:43 வில்லுப்பாட்டு திறந்த போட்டி**

**21.1** 1. ''மகளிர் நிறை காக்கும் காப்பே தலை'' (-திருக்குறள்)
2. '' சான்றவர் கைஉண்டும் கூறுவர் மெய்'' (பழமொழி நானூறு)

**முக்கிய குறிப்பு :** வில்லுப்பாட்டு நிகழ்ச்சிக்கு சமய சம்பந்தமான கதைகள் தவிர்க்கப்படல் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

**22.0 போட்டி இல: 46 முஸ்லிம் கலாசார நிகழ்ச்சி - வார்ப்பு நாடகம்**

**22.1 நேரம்:12-15 நிமிடம்**

**22.2 விடயப்பரப்பு:** சமூகப் பெறுமானமுள்ள செய்தியொன்றை வெளிப்படுத்தும் வகையில் சமய, கலாசாரப் பின்னணியுடன். கீழ்வரும் விடயப் பரப்பில் ஒன்றை மையமாகக்கொண்டு நடித்துக்காட்டப்படல் வேண்டும்.

1. **உண்மை வழிநடப்போம்**
2. **உழைத்து வாழ்வோம்**
3. **பிறர்க்கு உதவுவோம்**

விளக்கம்:

- கதாபாத்திரங்கள் பொருத்தமான ஆடையலங்காரங்களுடன் நாடகம் ஆரம்பித்து முடிவுறும் வரையில் குறித்த இடத்தில் நின்றபடியே சபையை முதன்மைப்படுத்தி உரையாடல்களை நிகழ்த்துவர்.
- கதாபாத்திரங்கள் 15-20 நிமிடம் வரை

சிறப்பு விதிகள்

i. ஆறாந்தரத்துக்குட்பட்ட மாணவர்களாயின் பால் வேறுபாடின்றி பங்குபற்றலாம்.
ii. ஆறாந்தரத்துக்கு மேற்பட்டவர்களாயின் ஆண்கள் அன்றேல் பெண்கள் மாத்திரமே பங்குபற்றலாம்
iii. முகபாவம் , இயல்பான அங்கஅசைவு, உரையாடல்களை சபையை முதன்மைப்படுத்தி நிகழ்த்த வேண்டும்.
iv. உரையாடல்கள் தெளிவாக எவருக்கும் விளங்கக்கூடியதாக அமைதல் வேண்டும்.
v. நாடகம் ஓர் அங்கமாகவோ, பல அங்கங்களைக்கொண்டதாகவோ அமையலாம். ஆனால் ஆரம்பித்து முடிவதற்கிடையில் திரை மூடித்திறத்தல் தவிர்க்கப்படல் வேண்டும்.
vi. ஒலிப்பதிவு , வாத்தியக்கருவிகள், தளபாடம் மற்றும் சாதனங்கள் எதுவும் பயன்படுத்தக்கூடாது.
vii. வேறு நாடகங்களின் பிரதிபண்ணலாக இருக்ககூடாது.
viii. நாடகம் எந்த வகையிலும் எவரையும் புண்படுத்தக்கூடாது.

ix. அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட வார்ப்பு நாடகப்பிரதி நிகழ்வின்போது இணைப்பாளரிடம் கையளிக்கப்பட வேண்டும்.அதில் விடயப்பரப்பு , தலைப்பு, எழுதியவர் பெயர் விபரம் என்பன இடம்பெறவேண்டும்.

புள்ளித்திட்டம்

| **இல** | **விடயம்** | **புள்ளி** |
|---|---|---|
| ை | கதையும் கருத்தும் | 25 |
| ைை | வெளிப்பாட்டும் தாக்கமும் | 25 |
| ைைை | ஆடையணிகள் | 10 |
| ைஎ | உத்திகள் | 15 |
| எ | ஒழுங்கமைப்பும் முகாமையும் | 20 |
| எை | நேரக்கட்டுப்பாடு | 05 |
| | மொத்தம் | 100 |

23.0 **போட்டி இல: 47 : சிங்கள மாணவர்களுக்கான தமிழ் வாசிப்பு தரங்கள் 06,07 விசேட பிரிவு-1**

24.0 **போட்டி இல:48 விசேட பிரிவு-11 தரங்கள் : 08,09**

சிங்கள மாணவர்களுக்கான தமிழ் பேச்சு

24.1 விடயம்:

1. **அன்புதான் இன்ப ஊற்று**
2. **சுற்றாடலும் சுத்தமும்**

25.0 **போட்டி இல:49 தரங்கள் : 06,07 (விசேடபிரிவு1)**

. சிங்கள மாணவர்களுக்கான தமிழ் உறுப்பெழுத்து

(சொல்வதெழுதல்)

25.1 விடயம்: **கலாசாரமும் நாமும்**

26.0 **போட்டி இல:50 தரங்கள் : 08,09 (விசேடபிரிவு11)**

சிங்கள மாணவர்களுக்கான தமிழ் உறுப்பெழுத்து
(சொல்வதெழுதல்)

**26.1 விடயம்: கல்வியின் பயன்கள்**

**எச்.யு. பிரேமதிலக**
**மேலதிக செயலாளர்,**
**கல்வி மற்றும் பண்புசார் அபிவிருத்தி**
**செயலாளருக்காக**